முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

முன்னிலை : திரு. V. பத்மநாபன், M.A. M.L., D.H.,
முதன்மை மாவட்ட நீதிபதி.

2026 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் நாள், புதன்கிழமை.

மாறுதல் மனு எண்.10/2025
(Filing No.OP/336/2025)
(CNR No.TNPB01-001723-2025)

கிருஷ்ணமூர்த்தி, 65/25,
த/பெ.(லேட்) காளி செட்டியார்,
வெங்கடேசபுரம், பெரம்பலூர் மாவட்டம்.

.... மனுதாரர்.

-எதிர்-

1. கே.காளிசெட்டியார் அன்ட் சன்ஸ்,
பாத்திரக்கடை அதன் நிர்வாக பங்குதாரர்கள் செல்வராஜ்,
பெரம்பலூர் மாவட்டம்.

2. வெங்கடேசன், 60/2025,
த/பெ.(லேட்) காளி செட்டியார்,
பெரம்பலூர் டவுன் மற்றும் மாவட்டம்.

3. தமிழ்ச்செல்வி, 59/25,
சென்னை.
தற்போது பெரம்பலூர். .... எதிர்மனுதாரர்கள்.

இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்கள்.இ.வள்ளுவன்நம்பி, சி.பால்ராஜ், ஆர்.பன்னீர்செல்வம், கே.பெரியசாமி, பி.இளமைச் செல்வன், எஸ்.பிரியதர்ஷனி, பி.வடிவேல், எம்.அஜித்குமார் மற்றும் எஸ்.தரணி ஆகியோர் ஆஜராகியும், 3 ஆம்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.11 20:02:55 +0530

எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.முத்தமிழ்செல்வன், அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும், இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், இறுதியாக 27.02.2026 அன்று என் முன்பாக வரப்பெற்று இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்

உத்தரவு

பெரம்பலூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.150/2016 வழக்கினை, இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.49/2023, 52/2023 மற்றும் 36/2025 ஆகிய பாக வழக்குகளுடன் ஒன்றாக சேர்ந்து விசாரித்து உத்தரவு பிறப்பிக்க இந்நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவிட கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:

1, 2 எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு எதிராக பெரம்பலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.150/2016 நிலுவையில் இருந்து வருகிறது. அந்த வழக்கின் சொத்து விபரத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து மனுதாரர், எதிர்மனுதாரர்கள் மற்றும் இறந்துபோன K. காளி செட்டியாரின் வாரிசுகளான சண்முகம், முருகேசன் என்ற முருகன், சீனிவாசன், குங்குமச் செல்வி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட இந்து பூர்வீக கூட்டுக் குடும்பச் சொத்தாகும். மேற்படி சொத்தானது இறந்துபோன K. காளி செட்டியார் தனித்த உரிமையாளராக வணிகம் ஆரம்பித்து அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே மேற்படி கடையை பங்குதாரர் நிறுவனமாக மாற்றி, அதில் K.காளி செட்டியார் நிர்வாக பங்குதாரராகவும், சண்முகம், செல்வராஜ், மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் கூட்டாண்மை பங்குதாரர்களாக காண்பித்து வணிகத்தினை தொடர்ந்து நடத்தி வந்தார்கள்.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.11 20:03:00 +0530

மேற்படி காளி செட்டியார் இறந்த பிறகு, காளி செட்டியார் பாத்திரக்கடை அதே உரிமத்தில் நெ.61 கடைவீதிக்கு மாற்றப்பட்டு பொதுக் குடும்ப வணிகமாக நடைபெற்று வருகிறது. இறந்துபோன K. காளி செட்டியாரின் மகன்கள் உரிய வயது அடைந்ததும், அவரவர்கள் பெயரில் குடும்பச் சொத்தில் இருந்து கிடைத்த வருமானத்தினை கொண்டு ஒவ்வொருவரின் பெயரிலும் தனித்தனியாக சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார்கள். இறந்துபோன K. காளி செட்டியார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பொதுக்குடும்ப சொத்துக்கள் குறித்து இதுநாள்வரை அவரது வாரிசுகளுக்கிடையே எவ்விதமான பாகப்பிரிவினையும் ஏற்படாமல் இந்து பூர்வீக கூட்டுக் குடும்பச் சொத்தாக அனுபவம் செய்து வருகிறார்கள்.

மேற்படி பொதுக்குடும்பச் சொத்தில் K. காளி செட்டியார் & சன்ஸ் என்ற பெயரில் பெற்றுள்ள உரிமத்தினைக்கொண்டு இதுநாள் வரை வணிகம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஆனால், எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கில், மேற்படி சொத்து அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றும், மேற்படி கடையை புதியதாக ஒரு பதிவு செய்யப்படாத கூட்டாண்மை நிறுவனமாக நடைபெறுகிறது என்று ஆவணம் தாக்கல் செய்து குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும் K. காளி செட்டியார் & சன்ஸ் சார்பாக K. செல்வராஜ் மற்றும் K. வெங்கடேசன் இருவரும் மேலாண்மை பங்குதாரர்களாகவும், வெங்கடேசன் என்பவரை பங்குதாரர் என காண்பித்து அதற்குரிய ஆவணமாக K. காளி செட்டியார் & சன்ஸ் உரிமத்தினை வைத்து வணிகம் செய்து வருகிறார்கள். ஆனால், 2-ம் எதிர்மனுதாரர் மேற்படி வணிகத்தில் எந்த காலத்திலும் பங்குதாரராக இருந்தது கிடையாது. 3 ஆம் எதிர்மனுதாரருக்கு சொத்தில் பாக உரிமை ஏதும் இல்லையெனினும் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் 3 ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக மேற்படி அசல்வழக்கு எண்.150/2016 –ல் நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளதால், அவர் 3 ஆம் எதிர்மனுதாரராக

சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி யாரிடமும் எந்தவிதமான பரிகாரமும் கோரவில்லை.

தற்சமயம் இறந்துபோன K. காளி செட்டியாரின் மூத்த மகனான சண்முகம் என்பவர் இந்நீதிமன்றத்தில் O.S. No.49/2023 மற்றும் O.S.52/2023 என்ற இரு பாக வழக்குகளை தாக்கல் செய்துள்ளார். மேற்படி பாக வழக்கில் இரண்டு சொத்தை பொறுத்து மட்டும் பாக வழக்கு தாக்கல் செய்து உள்ளதால், மனுதாரரால் இறந்துபோன K. காளி செட்டியார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பொதுக் குடும்பச் சொத்துக்கள் பொறுத்து தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.36/2025 இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஷை பாக வழக்கில் O.S.150/2016–ல் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து, 13 வது அயிட்டமாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்தும், பொது கூட்டுக்குடும்ப சொத்து என்பதால், O.S.150/2016–ஐ தாக்கல் செய்துள்ள வாதிகளான 1,2 எதிர்மனுதாரர்கள் மேற்படி சொத்தில் தனிப்பட்ட உரிமை கோர முடியாது. ஆனால், மேற்படி உண்மைகளை மறைத்து மேற்படி சொத்தும், பாத்திரக்கடையும் எதிர்மனுதாரர்களுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்று சட்டத்திற்கு புறம்பான வகையில் உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

மேற்படி சொத்தும், இறந்துபோன K. காளி செட்டியாரின் வாரிசுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட பொதுக் குடும்பச் சொத்துக்கள் என்பதால், இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.O.S.49/2023, 52/2023 மற்றும் 36/2025 வழக்குடன், பெரம்பலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள அசல் வழக்கு எண். O.S.150/2016–ஐ ஒன்றாக சேர்த்து நடத்த வேண்டியது அவசியமும், நியாயமும் ஆகிறது. இல்லையேல், மனுதாரருக்கு பெருத்த நஷ்டமும், கஷ்டமும் ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படும். எனவே, இம்மனு.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.11 20:03:08 +0530

3. <u>1 மற்றும் 2 ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

பெரம்பலூர் கூடுதல் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் O.S.No.150/2016–ல் நிலுவையில் இருக்கும் வழக்கின் சொத்து பொதுக்குடும்ப சொத்து அல்ல. மேற்படி வழக்கில் வாதியான M/S. K.காளிசெட்டியார் & Sons என்கின்ற பார்ட்னர்சிப் firm–ன் managing பார்ட்னர்கள் ஆன கே. செல்வராஜ், கே. வெங்கடேசன், கே. சீனிவாசன் மற்றும் S.சித்ரா, V.வசந்தி ஆகியோர்களைக் கொண்டு தனியாக ஆரம்பிக்கப்பட்ட பார்டனர்சிப் firm ஆகும். மேற்படி பார்ட்னர்கள் ஆகிய S.சித்ரா managing பார்ட்னர் செல்வராஜின் மனைவி ஆவார். V.வசந்தி என்பவர் managing பார்ட்னர்ரான மேற்படி K.வெங்கடேசனின் மனைவி ஆவார். இதற்காக 02.06.2000–லேயே மேற்படி மூன்று managing பார்ட்னர்ஸ்களால் பெரம்பலூர் கடைவீதியிலேயே இடம் கிரையத்திற்கு வாங்கப்பட்டு, மூன்று அடுக்குமாடி தங்கள் சொந்த செலவில் கட்டப்பட்டது. மேற்படி பார்டனர்சிப் firm–க்கு மேற்படி, ஐவராலும் சமமாக தொகைகள் செய்யப்பட்டு, அதற்காக 01.04.2002–ல் ஒரு பார்ட்னர்சிப் Deed–ம் போடப்பட்டு, மேற்படி மூன்று மாடி கட்டிடத்திலேயே எவர்சில்வர், பித்தளை, வீட்டு உடயோக சாமான். அலுமினியம், வெங்கலம் மேற்படி பார்ட்னர்சிப் ஒப்பந்தபடி வேறு சில வீட்டு உபயோக பொருள்களும் விற்கப்பட்டு வருகின்றன. மேற்படி கட்டிடத்திற்கு தனியாக மின் இணைப்பு பெற்று, மின் கட்டணமும் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பிஸினஸ்க்கு பெரம்பலூர் நகராட்சிக்கு தொழில் வரியும், கட்டிடத்திற்கு சொத்து வரியும், இந்த எதிர்மனுதாரர்களால் கட்டப்பட்டு வருகிறது. பின்னர் மூன்று managing பார்ட்னர்களுக்குள் K.K. சீனிவாசன் என்பவர் Partnership firm–லிருந்து விலகிக்கொண்டார். மேற்படி நான்கு பார்ட்னர்களுடன் M/S. K.காளிசெட்டியார் & Sons Partnership firm மேற்படி பார்ட்னர்களுக்கு சொந்தமான சொத்திலேயே இயங்கிவருகிறது. பின்னர் மேற்படி பார்ட்னர்களுக்குள் S.சித்ரா மற்றும் V வசந்தி ஆகியோர்

விலகிகொண்டார்கள். அதில் எந்த உரிமையும் இல்லாத மனுதாரர் மற்றும் அவரது மனைவி தமிழ்செல்வி ஆகியோர் மேற்படி பார்டனர்சிப் firm பிஸினஸ் இந்த எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமான கட்டிடத்தில் பெரம்பலூர் கடைவீதியில் இயங்கிவந்த நிலையில், மேற்படி பார்ட்னர்களின் அமைதியான அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ய முற்பட்டதால் மேற்படி மனுதாரர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மனைவி தமிழ்செல்வி மீது நிரந்தர தடையுறுத்துக்கட்டளை வழங்குமாறு O.S.No.150/2016–ல் மேற்படி மேனேஜிங் பார்ட்னர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் I.A.No.560/2016–ல் தற்காலிக தடையுறுத்து கட்டளை, மேற்படி மனுதாரர் மீதும் மற்றும் அவரது மனைவி தமிழ்செல்வி மீதும் force–ல் உள்ளது. இந்த நிலையில் மனுதாரர் கிருஷ்ணமூர்த்தி 150/2016 வழக்கில் உள்ள சொத்து சம்மந்தமாக பெரம்பலூர் டி.மு. கோர்ட்டில் மேற்படி partnership firm managing partner–கள் செல்வராஜ், வெங்கடேசன் partner–கள் சித்ரா, வசந்தி மற்றும் மேற்படி managing partner–களின் சகோதரர்களான சண்முகம், சீனிவாசன் ஆகியோர்கள் மீதும், தலைவர் வணிக வரித்துறை கமிஷனர் Commercial tax Chennai இணை ஆணையர், வணிக வரித்துறை திருச்சி உதவி ஆணையர் வணிக வரித்துறை அரியலூர், ஆணையர் மத்திய அரசு, மற்றும் சரக்கு மற்றும் சேவை திருச்சி மாநில வணிக வரி அலுவலர், வணிக வரி அலுவலகம் பெரம்பலூர் ஆகியோர் மீது பொய்யான பல தகவல்கள் கூறி இந்த எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்கள் மனைவிகள் உள்ளிட்ட 1 to 6 பிரதிவாதிகள் மீது தாவா சொத்தில் உள்ளே நுழைந்து வியாபாரம் செய்வதற்கு தடையும், இடைஞ்சலும் செய்யாமல் இருக்கும் பொருட்டு ஒரு நிரந்தர தடைஉத்தரவு வழங்க வேண்டியும் இன்னும் வேறு சில பரிகாரங்கள் கேட்டும் O.S.No.156/20–ல் வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கு பெரம்பலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.11 20:03:17 +0530

மேற்படி O.S.No.150/16 வழக்கு பெரம்பலூர் கூடுதல் மாவட்ட முன்சிப் நீதிமன்றத்தில் விசாரணைக்கு போடப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. அவ்வாறு அந்த வழக்கு விசாரணையில் இருக்கும் போதே மனுதாரர் கிருஷ்ணமூர்த்தி பொய்யான சங்கதிகளுடன் பல்வேறு பரிகாரங்கள் கேட்டு O.S.No.36/25 என்ற வழக்கினை இந்நீதிமன்றத்தில் உள்நோக்கத்தோடு தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது. பெரம்பலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள O.S.No.150/16 வழக்கின் தோல்வி பயத்தின் காரணமாக மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால் மனுதாரர் கிருஷ்ணமூர்த்தி O.S.No. 156/2020 வழக்கினை இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்ய மனு தாக்கல் செய்யாதது அவரது மோசடி செயலை நிரூபிக்கும் விதமாகவே உள்ளது. மேற்படி O.S.No. 156/2020 வழக்கினை இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் கேட்காமல், O.S.No.150/2016 வழக்கினை மட்டும் மாறுதல் செய்ய கோருவது சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்புடையதல்ல. மேலும் O.S.No.150/16 வழக்கிலுள்ள தாவா சொத்து மேற்படி M/S காளிசெட்டியார் & Sons பார்ட்னர்சிப் firm by managing partners K.செல்வராஜ், K.K.வெங்கடேசன் ஆகியோரை கொண்ட பார்டனர்சிப்பிற்கு சொந்தமானதாகும். மனுதாரர் கூறுவது போல் அது பொது குடும்ப சொத்து அல்ல. அது இந்த எதிர்மனுதாரர்களின் தனிப்பட்ட சொத்து என்பதாலேயே மனுதாரர் மீதும் அவரது மனைவி தமிழ்செல்வி மீதும் மாண்புமிகு பெரம்பலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தற்காலிக தடையுறுத்து கட்டளை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் விசாரணை நடைபெற்று கொண்டு இருப்பதால் அவ்வழக்கில் தோல்வி பயம் காரணமாக வழக்கை முடிக்க விடாமல் இழுத்தடித்து, மேற்படி வழக்கு வாதிகளுக்கு அதாவது இந்த எதிர்மனுதாரர்களுக்கு மிகுந்த சிரமத்தை உண்டாக்கும் நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே, இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.11 20:03:21 +0530

4. <u>3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

1, 2 எதிர்மனுதாரர்கள், 3 ம் எதிர்மனுதாரர் மற்றும் மனுதாரர் மீது பெரம்பலூர் டி.மு கோர்ட்டில் O.S. 156/2016 என்ற வழக்கை நிரந்தர தடை உத்தரவு கோரி தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்து மனுதாரருக்கும், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கும் மற்ற சகோதரர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட இந்து பொதுக் கூட்டு குடும்பச் சொத்தாகும். அந்த சொத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் உரிமை ஏதும் இல்லை. ஆனால் 1, 2 எதிர்மனுதாரர்கள் சம்பந்தமில்லாத இந்த எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருந்த போதிலும், எதிர்மனுதாரருக்கு தாவாச் சொத்தில் எந்த உரிமையும் இல்லை. எதிர்மனுதாரருக்கு வழக்கிலும், O.P மனுவிலும், எந்தவிதமான உரிமையும் இல்லை என்பதால் இந்த மனுவில் கண்டுள்ளபடி பெரம்பலூர் டி.மு. கோர்ட்டில் உள்ள O.S.No 150/2016 வழக்கினை இந்நீதிமன்றத்தில் உள்ள OS 36/2025 பாக வழக்குடன் சேர்ந்து நடத்துவதில் இந்த எதிர்மனுதாரருக்கு ஆட்சேபனையும் இல்லை. எனவே, மனுதாரர் கோரியுள்ளபடி மாறுதல் கோரும் மனுவினை அனுமதிப்பதில் ஆட்சேபணை இல்லை. மேற்படி வழக்கில் கண்டுள்ள தாவா சொத்திற்கும், 3 ம் எதிர்மனுதாரருக்கும் எந்தவிதமான உரிமையும் இல்லை என்பதால் மனுதாரர் கோரியவாறு மனுவினை அனுமதிக்க வேண்டும்.

4. இந்த மனுவில், இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட்ட வேண்டிய பிரச்சனை

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.11 20:03:27 +0530

6. இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டது.

7. தீர்வு:–

இம்மனுவானது, மனுதாரரால் பெரம்பலூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.150/2016 வழக்கை இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.49/2023, 52/2023 மற்றும் 36/2025 ஆகிய 3 வழக்குகளோடு கூட்டாக சேர்த்து நடத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.150/2016 ஆனது நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி இந்த மனுதாரர் மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.49/2023 வழக்கானது இந்த மனுதாரர், எதிர்மனுதாரர்கள் மற்றும் சிலருக்கு எதிராக தாவாச் சொத்தில் 1/6 பாகம் மற்றும் நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும் மற்றும் அசல் வழக்கு எண்.52/2023 வழக்கானது இந்த மனுதாரர் மற்றும் சீனிவாசன் என்பவருக்கு எதிராக தாவா 3 அயிட்டச் சொத்துக்களில் 4/6 பாகம் மற்றும் நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும், அசல் வழக்கு எண்.36/2025 ஆனது இந்த மனுதாரரால் இறந்துபோன K. காளி செட்டியாரின் வாரிசுகள் மற்றும் சிலர் மீது பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரம் வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ 5 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு, மேலும் ஒரு அசல் வழக்கு எண்.156/2020 ஆனது பெரம்பலூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருவதாகவும் மேற்படி

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.11 20:03:31 +0530

வழக்கையும் இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

8. மேற்படி மனு, எதிருரைகள் மற்றும் ம.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், மேற்கண்ட வழக்குகளின் சொத்துக்கள் குறித்து கோரும் உரிமை, பாகம் மற்றும் தரப்பினர்களும் ஒன்றாக இருப்பதை அறிய முடிகிறது. வெவ்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை ஒன்றாக சேர்த்து நடத்தினால் பல்வேறு வழக்குகள் உருவாவதையும், கால விரயத்தையும் தவிர்க்க இயலும் என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தோல்வி பயம் காரணமாக வழக்கை முடிக்கவிடாமல், இந்த எதிர்மனுதாரர்களுக்கு சிரமத்தைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அனைத்து சங்கதிகளையும் ஒருங்கிணைத்து பார்க்கும்போது, மேற்படி வழக்குகள் வெவ்வேறு நீதிமன்றங்களால் தனித்தனியாக விசாரிக்கப்பட்டால், முரண்பட்ட முடிவுகளை வழங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளது. இது பல வழக்கு நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும். எனவே, மேற்படி அனைத்து சங்கதிகளையும் மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டும், மேற்படி அனைத்து வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் விசாரிப்பதே நியாயமான ஒன்றாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் வழக்குகள் ஒரே நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டால், தரப்பினர்களுக்கிடையே எவ்விதமான பாரபட்சமும் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே, இந்த நீதிமன்றம் மாறுதல் மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது. எனவே, பெரம்பலூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.150/2016 மற்றும்

PADMANABAN VENKATASAMY
Prinicial District Judge, Digitally signed by PADMANABAN VENKATASAMY Location: Perambalur. Date: 2026.03.11 20:03:35 +0530

156/2020 ஆகிய இரு வழக்குகளையும் , இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.49/2023, 52/2023 மற்றும் 36/2025 ஆகிய 3 வழக்குகளோடு கூட்டாகவோ அல்லது ஒரே நேரத்திலோ நடத்த வேண்டுமென்று உத்தரவிட்டு இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

9. இறுதியாக, இம்மனு செலவுத் தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

(I) பெரம்பலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.150/2016 மற்றும் 156/2020 ஆகிய வழக்குகளை இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து, இந்நீதிமன்ற கோப்பில் அவ்விரு வழக்குகளையும் எடுத்து, இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்கள்.49/2023, 52/2023 மற்றும் 36/2025 ஆகிய 3 வழக்குகளோடு கூட்டாகவோ அல்லது ஒரே நேரத்திலோ நடத்த உத்தரவிடப்படுகிறது.

(ii) வழக்குகளை விரைந்து முடிக்க தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு ஒத்துழைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் நிர்வாக உதவியாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.11 20:03:41 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

மனுதாரர் தரப்பு சாட்சியம் :

– இல்லை –

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :

| | | |
|---|---|---|
| 1 | ம.சா.ஆ.1 | பெரம்பலூர் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.150/2016–ன் வழக்குரை நகல். |

| | | |
|---|---|---|
| 2 | ம.சா.ஆ 2 | பெரம்பலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.49/2023–ன் வழக்குரை நகல். |
| 3 | ம.சா.ஆ 3 | பெரம்பலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.52/2023–ன் வழக்குரை நகல். |
| 4 | ம.சா.ஆ 4 | பெரம்பலூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண். 36/2025–ன் வழக்குரை நகல். |
| 5 | ம.சா.ஆ 5 | பெரம்பலூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.156/2020–ன் வழக்குரை நகல். |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணம் :
– இல்லை –

PADMANABAN VENKATASAMY

Prinicial District Judge,
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Location: Perambalur.
Date: 2026.03.11 20:03:46 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
பெரம்பலூர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
பெரம்பலூர்.

வரைவு/தெளிவு உத்தரவு
Tr.O.P.No.10/2025
தேதி: 11.03.2026.